முச்சந்தி முரளி



"அப்ப எங்கட யாழ்ப்பாணத்து ஆக்களும் இனி வானத்தில ரவுண்டடிக்கப் போகினம் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 107

செவ்வாய்க்கிழமை
12 மார்ச் 2024

மாசி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# ஆதிலிங்கேஸ்வரரை அரசே, அபகரிக்காதே!

## கைவிலங்கைக் கழற்றாமலேயே கைதானோருக்கு சிகிச்சை

வவுனியா, மார்ச் 12

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரும் கைவிலங்குகளுடனேயே மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

மகாசிவராத்திரி அன்று வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை நீதிமன்றின் கவனத்

11

## கைதானோரை விடுவிக்கக்கோரி நல்லூரில் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 12

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி வழிபாடுகளின்போது பொலிஸார் நிகழ்த்திய அராஜகங்களுக்கு எதிராகவும், சட்ட விரோதமாக கைதானோரை விடுவிக்க வலியுறுத்தியும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

11



## பொலிஸ்மா அதிபர் வடக்குக்கு வருகை

புதிதாக நியமிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் எதிர்வரும் 16ஆம் திகதி

11

## யானை தாக்கி முதியவர் சாவு

முல்லைத்தீவு, மார்ச் 12

அம்பகாமம் பழைய கண்டிவீதியில் கரிப்பட்ட முறிப்பில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி முதியவர் நேற்று

11

வட்டுக்கோட்டையில் நேற்றிரவு பதற்றம்

## காரில் கடத்திச் சென்ற கும்பலால் வெட்டிச் சரிக்கப்பட்ட இளைஞன்

காப்பாற்ற மறுத்த கடற்படையினர்? முன்விரோதம் என்கின்றனர் பொலிஸார்

பக்.11



கேப்பாப்பிலவில்

## 2,500 ஏக்கர் காணிகளை விடுவிக்கவேண்டும்

மாவட்டச் செயலரிடம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவில் இன்னும் 2 ஆயிரத்து 500 ஏக்கர் வரையான காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

11



## ரமழான் நோன்பு இன்று ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 12

புனித ரமழான் மாதத்துக்கான தலைப்பிறை நேற்றுத் தென்பட்டதால் புனித ரமழான் நோன்பு இன்று ஆரம்பமாவதாக, கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ-இ)

'சதொச' புதைகுழி

## இறப்புக்குக் காரணமென்ன? அறிக்கை இன்னும் இல்லை!

நீதிமன்றில் சுட்டிக்காட்டு

மன்னார், மார்ச் 12

'சதொச' மனிதப்புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் வயது, பால் மற்றும் இறப்புக்கான காரணம் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கை நீதிமன்றுக்கு இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழி வழக்கானது நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்குத் தொடர்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் வாதிடும் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்ததாவது:-

நீதிமன்றத்தால் கோரப்பட்ட அறிக்கை கடந்த தவணை சட்டமருத்துவ அதிகாரி ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

11

## நாடாளுமன்றம் மே மாதம் கலைப்பு?

கொழும்பு, மார்ச் 12

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தவேண்டுமெனில் தற்போதைய நாடாளுமன்றம் மே 13 ஆம் திகதி ஆரம்பமாகும் வாரத்தில் கலைக்கப்படவேண்டும் என்று சட்டத்துறைப் பேராசிரியரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

11

## விமானப்படையில் இணைய யாழில் 250 பேர் விண்ணப்பம்

கண்காட்சி ஊடாக ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

சிறிலங்கா விமானப் படையில் இணைந்து கொள்வதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையோர் 250 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முற்றவெளியில் சிறிலங்கா வான்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெவ்வேறு தேர்தல்களை விரும்பும் ராஜபக்ச, ரணில்

## அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 12

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த விரும்பினாலும், ராஜபக்சக்கள் பொதுத்தேர்தலை முதலில் நடத்த விரும்புகின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அடிமட்டத்தில் தமக்கு வலுவான ஆதரவு இல்லாததால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவே ரணில் விரும்புகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வலுவான வேட்பாளர் ஒருவர் இல்லாததால் ராஜபக்சாக்கள் பொதுத்தேர்தலை விரும்புகின்றனர் - என்றார். (எ-இ)



# மோசமடைகின்றது இலங்கை நிலைமை

## ஐ.நா.வில் சுட்டிக்காட்டிய மல்கம் ரஞ்சித்

இலங்கைநிலைமைமோசமடைந்து வருகின்றது என்று கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஐ.நா. மனிதஉரிமைகள்பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடரில்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜனநாயகவிரோத சர்வாதிகாரப் போக்கில் அரசாங்கம்செயற்பட்டு வருகிறது. ஊடக ஒடுக்குமுறைச்சட்டங்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. பயங்கரவாதம் என்ற வரைவிலக்கணத்தின் கீழ் நினைத்தபடி கைது செய்வதற்கும் தடுப்புக்காவலை நீடிக்கவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சுயாதீன, திறந்த விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாம் வலியுறுத்தி வருகிறோம். எனினும் அரசாங்கம் தொடர்ச்சியாக எமது கோரிக்கையை நிராகரித்து வருகிறது. கடந்த காலச் சம்பவங்கள் தொடர்பில் திறந்த விசாரணைகளை நடத்துமாறு இலங்கையை வலியுறுத்தும் படி ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (எ-6)

# பிரபஞ்சம் திட்டத்தை குழப்புவதற்குச் சதி!

கொழும்பு, மார்ச் 12

திறன் வகுப்பறைகள் மற்றும் பாடசாலைப் பேருந்துகள் என்பவற்றை வழங்கு வதற்காக முன்னெடுக்கப்படும் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தை குழப்புவதற்குச் சதிமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருகோணமலை கிண்ணியா மத்திய கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் பேருந்தை வழங்கிய பின்னர் மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் மூலம் 'ஸ்மார்ட்' மாணவ சமூகமும் 'ஸ்மார்ட்' நாடுமே கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறான சவால்கள் வந்தாலும் இந்த வேலைத்திட்டத்தை நிறுத்தமாட்டோம். வறுமையை ஒழிப்பதற்கான முக்கியமான திட்டங்களில் ஒன்றாக ஸ்மார்ட் கல்வியை கருத முடியும். கல்வியை வலுப்படுத்துவதன் மூலமும், அறிவை மேம்படுத்துவதன் மூலமும், சிறந்த கல்வியின் ஊடாக கூடிய வருமானம்ஈட்டும்வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் உருவாக்கி ஏழ்மையை ஒழிக்க முடியும் - என்றார். (ம)

# குத்தகை வாகனங்களுக்கு ஆண்டுக்கு 2,562 மில். ரூபா

கொழும்பு, மார்ச் 12

அரச நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்ட வாகனங்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும்தொகை 2 ஆயிரத்து 562 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கம்பஹா மாவட்ட சபை உறுப்பினர் கோகிலா குணவர்த்தன கேட்ட கேள்விக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. (எ-இ)

# சோதிடர் மறைவு



யாழ்ப்பாணம், மார்ச் 12

குப்பிழான் மண்ணின் முதுபெரும் சோதிடரும், ஓய்வு நிலை அதிபருமான க.ஐயம்பிள்ளை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது 103 ஆவது அகவையில் காலமானார். (எ-66)

# பொதுவேட்பாளராக களமிறங்குவார் ரணில்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 12

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தேசிய பொதுவேட்பாளராக களமிறங்குவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தெரிவித்தனர்.

குருநாகல், குளியாப்பிட்டியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, உப தலைவர் ரவி கருணாநாயக்க ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டனர். அடுத்து எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-44)

# முட்டாள்தன நடவடிக்கைகளே கோத்தாபயவை ஓடவைத்தன!

## பின்னணியில் சதி எதுவுமில்லை; விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

முட்டாள்தனமான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளால்தான் கோத்தாபய ராஜபக்ச பதவியைக் கைவிட்டுத் தப்பித்தோடினாரே அன்றி எந்தச் சதித் திட்டங்களும் இதன் பின்னணியில் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமது வீழ்ச்சிக்குத் தமிழர்களையும் முஸ்லிம் மக்களையும் மறைமுகமாகக் குற்றஞ்சாட்டும் கோத்தாபய ராஜபக்ச, 'அரகலய'வில் பங்குபற்றியோரில் 99 சதவீதமானோர் சிங்கள இளைஞர்களே என்பதை மறந்துவிடக்கூடாது. 'அரகலய' இளைஞர் யுவதிகளை கிளர்ந்தெழச் செய்தவை கோத்தாபயவின் முட்டாள்தனமான பொருளாதார நடவடிக்கைகளே.

இரசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை உரத்தை எமது விவசாயிகள் பாவிக்கவேண்டும் என்பதில் எவரிடத்திலும் இரண்டாவது கருத்து ஒன்று இருக்கமுடியாது. ஆனால் சரியோ பிழையோ செயற்கை உரங்களை நம்பியே விவசாயிகள் அண்மைக் காலங்களில் விவசாயம் செய்து வந்துள்ளார்கள். ஆகவே திடீரென செயற்கை உரத்தை வெளிநாட்டில் இருந்து வருவிப்பதைத் தடுத்தால் என்ன நடக்கும் என்று அவர் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். சிந்தித்திருந்தால் 'வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்களின் பின் செயற்கை உரங்களை வருவிப்பதை நீக்க இருக்கின்றோம். அவற்றுக்குப் பதில் பலமான இயற்கை உரங்களை உருவாக்க இப்பொழுதிருந்தே ஆயத்தமாகுங்கள்' என்று கூறியிருப்பார். அவ்வாறு செய்யாது சிங்கள மக்களின் வயிற்றில் அடித்துவிட்டு சிறுபான்மையினரின் சதியே தமது வெளியேற்றம் என்று கூறுவது சிறுபிள்ளைத்தனமாகும்.

அடித்துத் துரத்தப்படவேண்டிய ஒருவர் என்று சிங்கள மக்களால் அடையாளம் காணப்பட்ட ஒருவரே அவர்களால் விரட்டப்பட்டார். துஷ்டர் ஒருவரை சிங்கள இளைஞர், யுவதிகள் பதவியில் இருந்து நீக்கினார்கள் என்பது தான் உண்மை. அது சதி அல்ல தண்டனை. மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும். அவ்வாறு நிறுத்தப்படுவதை அவரின் இந்த நூல் தடுக்கும் என்று கோத்தாபய நினைத்தாரானால் மனோ கணேசன் கூறியது போல் அவரைப்போல வடிகட்டிய முட்டாள் ஒருவர் இந்நாட்டில் இருக்க முடியாது - என்றுள்ளது. (ம)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றின் ஒழுங்குகளில்

கொழும்பு, மார்ச் 12

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தின் புதிய ஒழுங்குப் புத்தகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒழுங்குப் புத்தகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டு 5 தினங்களுக்கு பின்னர் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளமுடியும். அதன் பிரகாரம் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பம் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றின் அடுத்த அமர்வு மார்ச் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஜனவரியில் மட்டும்

# இறக்குமதிகளுக்கு 9,036 கோடி ரூபா!



கொழும்பு, மார்ச் 12

**கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் நுகர்வுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு 9 ஆயிரத்து 36 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான இறக்குமதிச் செலவை விட 28 வீதம் அதிகமாகும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார்.**

ஜனவரி மாதத்தில் உணவு மற்றும் பானங்கள் இறக்குமதிக்காக 5 ஆயிரத்து 29 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. உணவு மற்றும் பானங்களுக்கு மேலதிகமாக ஏனைய பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் 4 ஆயிரத்து 7 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## கடற்பரப்பில் கொந்தளிப்பு

மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்புடன் காணப்படும். இதனால் மீனவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின்சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன்கூடியமழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிகளில்வறட்சியானகால நிலை நிலவும்.

மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும்சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும். இதேவேளை - ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பிராந்தியங்களில் சில இடங்களில் மழைஅல்லது இடியுடன் கூடிய மழைபெய்யக்கூடும். கொழும்பில் இருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறைவரையிலும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும்அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றுள்ளது. (ம)

## குற்றவாளிகள் தப்பியோட்டம்!

கொழும்பு, மார்ச் 12

இலங்கையால் தேடப்பட்ட குற்றவாளிகள் பலர் டுபாயிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தீவிரமான குற்றச்செயல்களில் ஈடுபட்டு டுபாய்க்குத் தப்பிச் சென்றவர்களை அங்குவைத்துக் கைதுசெய்யும் விதமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இன்டர்போலின் உதவியைப் பெற்று அவர்களைக் கைதுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் டுபாயில் இருந்த குற்றவாளிகள் வேறு பெயர்களில் போலியான கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து டுபாயில் இருந்தும் தப்பிச் சென்றுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## யுக்தியவில் இராணுவம்!

கொழும்பு, மார்ச் 12

குற்றச்செயல்கள்மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரின் ஆதரவைப் பெறுவதற்குப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

'யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது பொலிஸ் அதிகாரிகளிடம் குறைபாடுகள் இருந்தால், அந்தச் சோதனைகளுக்குப்போதுமான அதிகாரிகள் இல்லை என்றால், குறிப்பாக வீதி மறியல் போன்றவற்றைச்செயற்படுத்தவேண்டும் என்றால், கடுமையான குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டியிருந்தால், அந்த மாகாணத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் ஊடாக இராணுவத்தினரைத் தொடர்பு கொள்ள முடியும்' பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார். (ம)

## வெளிநாட்டுக் கையிருப்பு 4,517 மில். டொலர்

2024 பெப்ரவரி இறுதியில் நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டுக் கையிருப்பு 4 ஆயிரத்து 517 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது. கடந்த ஜனவரி மாதம் இந்தத் தொகையானது 4 ஆயிரத்து 496 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## வரி செலுத்தாத நிறுவனங்கள் ஆறு மாதங்கள் காலக்கெடு!

160 பில்லியனுக்கும் அதிகமான வரி நிலுவைகளைச் செலுத்தாத ஆயிரம் நிறுவனங்களுக்கு வரியைச் செலுத்தக் கோரி உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்தல்களை அனுப்பியுள்ளது. நிறுவனங்கள் தங்கள் நிலுவைத் தொகையை ஆறு மாதங்களில் செலுத்தவேண்டும் அல்லது வங்கிக்கணக்குகள் மற்றும் சொத்துகளைப் பறிமுதல் செய்ய நேரிடும் எனத் திணைக்களத்தின் ஆளுநர் செபாலிகா சந்திரசேகரா கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டு இறுதிவரை நிலுவையில் இருந்தநிலுவைத்தொகையை உள்நாட்டு வருவாய் சட்டத்தின் கீழ் அதிகபட்ச அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட்டு வசூலிக்கப்படும்- என்றார். (ஏ-இ)

## பட்சி தினம் தெரியுமோ?

**பள்ளிக்கூடங்களில தனியப் பாடங்களை மட்டும் படிப்பிக்கிறேலை. எங்கட வாழ்க்கையில பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், நடைமுறையள் எண்டு கனக்க விசயங்களையும் சொல்லிக்குடுக்கிறவை. இளமையில் கல்வி சிலையில் எழுத்தெல்லோ. சின்ன வயதில அவைக்கு உதுகளைச் சொல்லிக்குடுத்தால் தான், பிற்காலத்தில அவை வளர்ந்தபிறகும் உதுகளை மறக்காமல் பின்பற்றுவினம். எப்பிடி நல்லவிசயங்கள் எங்கட சின்ன வயதில மனதுக்குள்ள பதியுதோ அதைமாதிரி கெட்ட விசயங்களும் சின்னனில மனதுக்குள்ள ஆணியடிச்ச மாதிரிப் பதியும். அதால என்ன விசயத்தைப் பிள்ளையளுக்கு சொல்லிக்குடுக்கோணும், என்ன விசயத்தைத் தவிர்க்கோணும் எண்டதில ரீச்சர்மார் கண்டிப்பா இருக்கவேணும். பள்ளிக்கூடங்களில விழாக்கள், போட்டியள் வைக்கிறது இப்பிடியான விசயங்களைப் பிள்ளையளுக்குப் பதியவைக்கத்தான். ஆனால் அதின்ர தாற்பரியம் தெரியாமல் கோமாளித்தனமான வேலையெல்லாம் பள்ளிக்கூடங்களில செய்யிறவையும் இருக்கினம்.**

**ஒரு பள்ளிக்கூடத்து ரீச்சர் கர்ப்பிணியாகி, கிட்டடியில அவாவுக்கு குழந்தையும் பிறக்கப் போகுது. இந்த நிலையில பள்ளிக்கூட அதிபரின்ர ஏற்பாட்டில, ரீச்சர்மாரெல்லாம் சேர்ந்து அந்த கர்ப்பிணி ரீச்சருக்கு பள்ளிக்கூடத்தில வைச்சு பெருமெடுப்பில 'வளைகாப்பு' நடத்தியிருக்கினம். தங்களோட படிப்பிக்கிற இன்னொரு ரீச்சருக்கு இப்பிடியெல்லாம் வளைகாப்பு வைக்கிற அளவுக்கு அவைக்குள்ள அன்பு இருக்குமெண்டால், அதை வெளியில எங்கையும் வைச்சிருந்தால் ஆரும் எதுவும் கேக்கமாட்டினம். அது அவையவையின்ர விருப்பம். ஆனால் பள்ளிக்கூட நேரத்தில, பிள்ளையளுக்குப் படிப்பிக்கிறதை விட்டிட்டு இப்பிடி வளைகாப்பு, சாமத்திய வீடு எண்டு பள்ளிக்கூட வளாகத்துக்கையே செய்ய வெளிக்கிடுறது கோமாளிக்கத்துத்தானே. ஒருவேளை அந்த ரீச்சர் தன்ர வளைகாப்புக்கு பள்ளிக்கூடப் பிள்ளையள் வரவேணுமெண்டு ஆசைப்பட்டால, அதை பள்ளிக்கூடத்தில வைச்சாவோ தெரியாது. கர்ப்பிணியள் ஆசைப்படுற எல்லாத்தையும் செய்து குடுக்கோணும் எண்ட ஒரு பாரம்பரியம் எங்களிட்ட இருக்கு. அதுக்கும் கட அவான்ர வீட்டில பங்ஷனை வைச்சிட்டு பிள்ளையளை அங்க கூப்பிட்டிருக்கலாம். பள்ளிக்கூடம் எண்டது கோயில் மாதிரி. அதைக் கலியாண மண்டபம் மாதிரி உப்பிடி விழாக்கள் நடத்திற இடமா மாத்தக்கூடாது.**

**இதெல்லாம் மலையகத்தில நடந்த சம்பவம் தானே எண்டு நாங்கள் அலட்சியமாவும் இருக்கேலாது. ஏனெண்டால் எங்கட ஆக்களும் புதிசா என்னென்ன பங்ஷனை, வித்தியாசமாக் கொண்டாடலாம் எண்டு வெறியில நிக்கினம். அவையள் ஆருக்கும் இப்பிடி பள்ளிக்கூடத்தில வளைகாப்பு நடத்தின கதை தெரிஞ்சால், தங்களுக்கும் பள்ளிக்கூடத்தில வளைகாப்பு நடத்தோணும் எண்டு நிண்டாலும் நிப்பினம் கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

நீர்வேலி, மார்ச் 12

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின்ஆசியுரையைத் தொடர்ந்து "ஆலய வழிபாடும் சமூக மேம்பாடும்" என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் ச.முகுந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்று சொற்பொழிவிலிருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ப)

*** *** ***

சிறுப்பிட்டி, மார்ச் 12

சிறுப்பிட்டி வடக்கு மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நாளைமறுதினம் வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர்கள் ஏ. அனுசாந்தன், செ.த.குமரன், பொன். சந்திரவேல், இளஞ்சைவப்புலவர்கள் க.கைலநாதன், ச.நவநீதன், நித்திய பாபுதரன், க.கயிலைவாசன், ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெற்று சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ப)

*** *** ***

நீர்வேலி, மார்ச் 12

நீர்வேலி வடக்கு அருள்மிகு காளி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச்சொற்பொழிவு நாளை புதன்கிழமை தொடக்கம் 23 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர்கள் செ.த.குமரன், பொன். சந்திரவேல், இளஞ் சைவப்புலவர்கள் க. கைலநாதன், ச. நவநீதன், க. கயிலைவாசன் ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெற்று, சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ப)

# குடிதண்ணீர் நிறுத்தம் பொதுமக்கள் அவதி!

முல்லைத்தீவு, மார்ச் 12

**கிளிநொச்சி - அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள நீர்த்தாங்கியில் இருந்து வழங்கப்பட்டுவந்த குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.**

சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த நீர்த்தாங்கியிலிருந்து வழங்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தால் நன்மையடைந்துவந்த நிலையில், கடந்த 15 நாள்களுக்கும் மேலாக விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் அசௌகரியத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். வெப்பகாலமான இக்காலத்தில் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து குடிதண்ணீர் வழங்கலை உறுதிப்படுத்தவேண்டும்என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-13)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாவட்டப்பனை, தென்னை வளஅபிவிருத்திகூ.சங்கங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவு சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. தலைவராக லி.நிர்மலனும், உபதலைவராக து. தங்கநாதனும், செயலாளராக நா. பார்த்தீபனும், பொருளாளராக சு. சிவலிங்கமும், சபை உறுப்பினர்களாக திருமதி சு. எழிலரசி, திருமதி ச.லாவண்யா, திருமதி ச. சுதர்சனா, ஆர்.ஆர்.பாபு, ச.கனி பாகரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-63)

## மஹோற்சவ பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ், கோவையம்பதி திருவருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் மடையுடன் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)

### இருள் நீங்கி ஒளி உதயமாக...



தவக்கால சிந்தனை

நம் வாழ்க்கை முழுவதும் எப்போதும் பாலைவனம் போன்ற வாழ்க்கைதானா? வாழ்க்கையே சோதனைதானா? துன்பமும் துயரமும் போராட்டமும்தான் வாழ்க்கையா? என்று அங்கலாய்க்கும் மனிதனுக்கு இந்தத் தவக்காலத்தில் இறைவன் கொடுக்கும் செய்தி; 'சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர்' என்பதேயாகும். இந்தச் செய்தி இன்றைய மனிதனுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது. இருள் சூழ்ந்த வாழ்க்கைக்கு புது விடியல் என்னும் நம்பிக்கையை தருகின்றது. பேரழிவைச் சந்தித்த மக்களுக்கு பெருவாழ்வு என்னும் நற்செய்தியைத் தருகிறது.

வாழ்வில் நாம் ஒரு புது விடியலை, புது வாழ்வை, பெரு வாழ்வை, விடுதலை வாழ்வை பெறவேண்டுமென்றால் இறைவனோடு உள்ள உறவை நாம் அதிகமாக்கவேண்டும். அன்று இறைவார்த்தைக்குப் பணிந்த தந்தை ஆபிரகாமின் விசுவாச வாழ்வுதான் இஸ்ராயேல் மக்களை இறைவனுக்கு நெருக்கமானவர்களாக்கியது. நாமும் இறைவனின் குரலுக்கு செவிமடுப்போம், இறைவார்த்தையை வாழ்வோம். ஒளியால் இருளை வெல்வோம்.

**அருட்தந்தை நமேஸ் அ.ம.தி**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் வீண்விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் குறைவாகவே கிடைக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத் துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** பிற்பகலுக்கு மேல் எதிலும் பொறுமையுடன் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களிடம் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டி இருக்கும் கணவன் – மனைவி இடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

# இ.போ.ச. பஸ் சாரதி மீது உரும்பிராயில் தாக்குதல்

இளைஞர் குழுவொன்றால் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டு இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பஸ் சாரதி ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மன்னார் முதல் யாழ்ப்பாணம் வசாவிளான் வரை சேவையில் ஈடுபடும் பஸ் சாரதியே தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் ஊரும்பிராய் ஊடாக பஸ் பயணித்தபோது, உரும்பிராய் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் மது அருந்திக்கொண்டிருந்த இளைஞர் குழு ஒன்று தங்கள் மீது பஸ் ஒளி பட்டது என்று தெரிவித்தே சாரதி மீது தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் தலையில் காயமடைந்த சாரதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# எதையும் தாங்கும் இதயங்கள்!

காடொன்றுக்குள் வழிதவறி நுழைந்த மனிதனொருவனை, பசியோடிருந்த சிங்கம் பார்த்துவிட்டது. அந்தச் சிங்கம் துரத்த, அவன் ஓடத் தொடங்கினான். திடீரென மலைச்சரிவொன்றில் தவறி விழுந்தவன் ஒரு மரக்கிளையைப் பற்றிக்கொண்டு தொங்கத் தொடங்கினான். அவனது கெட்ட காலம் அந்த மரத்தில் ஒரு விஷப்பாம்பு அவனை நோக்கி வரத் தொடங்கியது. மலையுச்சியில் சிங்கம் இவன் மேலே வரட்டுமெனக் காத்திருந்தது. கீழே பார்த்தான். சலசலக்கும் ஆற்றில் இவனை விழுங்க முதலைகள் காத்திருந்தன. எந்தப் பக்கம் திரும்பினாலும், அவனது உயிரைக் கொல்லும் ஆபத்துகள் சூழ்ந்திருந்த தருணத்தில், அந்த மரத்தில் இருந்த தேன்கூட்டில் இருந்து தேன்துளிகள் இவன் வாயில் விழுந்தன. எல்லா ஆபத்துகளையும் மறந்து போன அந்த மனிதன் தேனைச் சுவைக்கத் தொடங்கினான்.

இப்படி சிங்கம், பாம்பு,முதலை என்று ஆபத்துகள் கூட்டணி சேர்ந்து தாக்கினாலும், அதைப்பற்றியே கவலைப்படாமல் தேனை ருசி பார்க்கும் அந்த மனிதன் கட்டாயம் இலங்கையைச் சேர்ந்தவனாகவே இருக்கமுடியும். ஏனெனில் பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பங்கள், விலைவாசி உயர்வு, உள்ளூர் உற்பத்தி வீழ்ச்சி, மூளைசாலிகள் மற்றும் தொழிலாளர் படையின் வெளியேற்றம், போரால் உண்டான பாதிப்புகளின் விளைவுகள், இனவாத மற்றும் மதவாதப் பிரச்சினைகள் என நான்கு பக்கமும் நீருக்குப் பதிலாகப் பிரச்சினைகளால் சூழப்பட்ட இலங்கைத்தீவு மக்களில் வெறும் 14 வீதமானோரே மனவுளைச்சலுக்கு ஆளாகின்றனராம். அதனால் உலகிலேயே நல்ல மனோநிலையோடு இருக்கும் மக்களைக் கொண்ட நாடுகளில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. உண்மையில் இதுவோர் உலக ஆச்சரியமே. இவ்வளவு பிரச்சினைகளும் வேறொரு நாட்டில் நிகழ்ந்திருக்குமானால், அந்த நாட்டில் உள்ள அரைவாசிக்கும் மேற்பட்டோர் மனநிலை பாதிக்கப்பட்டு, பைத்தியக்காரர்களாகவே மாறியிருப்பர். 'எவ்வளவு அடிச்சாலும் தாங்கிறாண்டா, அதனால் இவன் ரொம்ப நல்லவன்டா' என்ற வடிவேலு பட வசனம் போல, இதைவிட நரகமே மேலானது என்ற நிலை வந்தாலும் கூட இலங்கை மக்கள் மனநலம் கெடாமல் உறுதியோடு இருப்பதை ஒரு மருத்துவ அதிசயம் என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படி எதையும் தாங்கும் இதயங்களாக இலங்கை மக்கள் இருப்பதற்கும், மனநலனில் சிறந்தவர்களாக உலகிலேயே இரண்டாமிடத்தைப் பெறுவதற்கும் மிகமுக்கியமான காரணம், கடந்த காலங்களில் பட்ட வலிதான். இலங்கையின் வரலாறு எப்போதுமே ஒரு சீரான நேர்கோட்டுப் பாதையில் பயணிக்கவில்லை. தொடர்ச்சியான படையெடுப்புகள், குழிபறித்தல்கள், ஆட்சிக் கவிழ்ப்புகள், அந்நிய தேசத்தவர்களின் அடக்குமுறைகள், ஆட்சியாளர்களின் கொடுங்கோல் நிர்வகிப்புகள், இயற்கைச் சீற்றங்கள், பெருந்தொற்றுகள், உள்நாட்டுப் போர், இன, மதவாத மோதல்கள், வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு இரையாதல் என்று ஓய்வில்லாமல் இலங்கை மக்கள் அல்லற்பட்டு, ஆற்றாது அழுத கண்ணீரோடு வாழ்தலே நிரந்தரமாகியிருந்தது. இப்படி ஒவ்வொரு வலியும், மக்களின் மனங்களை மரக்கச்செய்துவிட்டது. அதன் விளைவாக இப்போது என்னதான் துன்பம் நேர்ந்தாலும் அதன் போதெல்லாம் இன்பம் சேர்க்க யாழெடுப்பது போல, கவலைகளை மறந்துவிட்டு நடக்கவேண்டிய வேலைகளில் மட்டுமே மனதை லயிக்கச் செய்கிறார்கள். அதனால்தான் மனக்குழப்பங்களுக்கு ஆளாகாமல், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் பற்றற்ற நிலை இலங்கையர்களுக்கு வாய்த்திருக்கிறது. இப்படி மன நலம் சிறப்பாக இருப்பதற்கு கடந்தகாலங்களில் எம்மை வதைத்த ஆட்சியாளர்களுக்குத்தான் இலங்கை மக்கள் நன்றி சொல்லவேண்டும்.



# 252 மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

**கொழும்பு, மார்ச் 12**

**நாட்டில் 252 மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-
முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் பதவி விலகி ஐந்து மாதங்கள் கடந்துள்ளன. தற்போதைய சுகாதார அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் மருந்துப் பொருள் தட்டுப்பாட்டுக்கு இதுவரை தீர்வு வழங்கவில்லை.

பிரதேச மருத்துவமனைகளில் மருந்து கொள்வனவு செய்வதற்காக மருத்துவமனைப் பணிப்பாளர்களுக்கு நிதி வழங்கும் திட்டமொன்று நடைமுறையில் உள்ளது. இதனால் முறைகேடுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. மருந்துப் பொருள் கொள்வனவு கிரமப்படுத்தப்படவேண்டும் - என்றார். (எ-இ)

## துப்பாக்கி மகஸினுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 12
தெஹிவளையில் ரி-56 துப்பாக்கிக்குரிய மகஸின்கள் மற்றும் ஐஸ் போதைப் பொருள் என்பவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இவை கைப்பற்றப்பட்டன என்றும், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## ஹரகட்டாவுக்கு மறியல் நீடிப்பு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஹரகட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக நேற்றுக் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-இ)

## நாளாந்தம் 2 ஆயிரம் குடிதண்ணீர் முறைப்பாடுகள்



கொழும்பு, மார்ச் 12
தற்போது குடிதண்ணீர் பயன்பாடு அதிகரித்துள்ளதால், குடிதண்ணீர் வழங்கல் தொடர்பில் நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார். (எ-இ)

## மனநிலை தரவரிசையில் முன்னேறியது இலங்கை

உலகில் குறைவான மன உளைச்சலுக்கு உள்ளானநாடுகளில்இலங்கை தரவரிசையில் இரண்டாவது நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 89 மதிப்பெண்களுடன் மனநிலை மட்டத்தில் மிக உயர்ந்த தரவரிசையில் இலங்கை இடம்பெற்றுள்ளது.
சபின்லைப் (Sapien Labs) அமைப்பின் 2023 ஆம் ஆண்டுக்கான உலக மனநிலை அறிக்கையின்படி இலங்கையில் மன உளைச்சலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இலங்கையின் சனத்தொகையில் 14 சதவீதமானோர் மாத்திரமே மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை**

13.03.2024
**புதன்கிழமை**
**மாசி–30**

சுபநேரம் : 04.51 -06.21
ராகுகாலம் : 12.21 - 01.51

**நாளொரு நல்வார்த்தை**

கிழிந்த புத்தகத்தில் கூட
நீ உயர்ந்து வாழ
ஒரு சில வரிகள் இருக்கும்
ஒருமுறையேனும் படித்துப் பார்.
– குட்டிக்கவிஞன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற போட்டிக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு. ஜெகதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-9)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி வியர்வைத் துளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கருத்தரங்கும், கலை நிகழ்வும் தர்மபுரம் தனியார் விருந்தக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. (எ-113)



பூநகரி, முக்கொம்பன் கிராமத்திலுள்ள பாடசாலைக்குத் தினமும் நடந்துவரும் 10 மாணவர்களுக்கு, கொழும்பு நகர பிஷப் கல்லூரி மாணவிகள் நடைபயணம் மூலம் சேகரித்த நிதியில் கடந்த வியாழக்கிழமை துவிச்சக்கர வண்டிகளை வழங்கிவைத்தனர். (ப-13)



அமரர்களான கருணாகரன் - சாரதாம்பாள் தம்பதிகளின் இரண்டாவது ஆண்டு நினைவாக, அவர்களின் குடும்பத்தினரின் நிதியுதவியில் சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலன் ஏற்பாட்டில் புங்குடுதீவுக் கிராமத்திலுள்ள பயனாளிகளுக்கு பயன்தரு வாழைக்குட்டிகள், தென்னம் பிள்ளைகள் என்பன வழங்கப்பட்டன. (ப)



சமத்துவக் கட்சியின் மகளிர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. சமத்துவக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேசசபையின் முன்னாள் பெண் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-113)




நல்லூரர் கிங்டம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கமும் மயிலிட்டி கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகமும் இணைந்து புன்னாலைக்கட்டுவன் இராஜேஸ்வரி அன்புச் சோலையிலுள்ள 18 வீட்டுத் திட்டக் குடியிருப்பாளர்களுக்கு வீட்டுத் தோட்டத்துக்குரிய மரக்கறிக் கன்றுகள், வாழைக்குட்டிகள் மற்றும் உர வகைகள் என்பவற்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைத்தன. (ப-9)

முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியில் கால்பந்தாட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட கால்பந்தாட்ட மைதானம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அமரர் அருண் விக்னேஷ்வரராஜா நினைவாக அவருடைய குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் இந்த விளையாட்டு மைதானம் சீரமைக்கப்பட்ட நிலையில், அண்மையில் அது திறந்து வைக்கப்பட்டுள்ளது. திறப்பு விழாவின் ஒரு பகுதியாக மைதானத்தைச் சுற்றி மரநடுகையும் இடம்பெற்றது. (ம-13)



## மல்லாவி மத்திய கல்லூரியில் கால்பந்தாட்ட மைதானம் திறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

**பூபதிப்பிள்ளை கதிரவேலுப்பிள்ளை (அன்னலட்சுமி)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**393/16, கோவில் வீதி,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**

(CS 28167) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 04 . 1976



மறைவு 10 . 03 . 2024

**தெய்வேந்திரம் தர்மேந்திரா (ஜேக்கப் - சதீஸ்)**

ஜீவ ஒளி மிஷன் திருச்சபையைச் சேர்ந்தவரும், ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் தர்மேந்திரா நேற்று முன்தினம் (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் தெய்வேந்திரம் - புவனேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், ஆரண்யாவின் (குடும்ப நல உத்தியோகத்தர் - உடுவில் சுகாதார பணிமனை) அன்புக் கணவரும், ஷலேமி அர்ப்பணா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சாரோன் அபூர்வன் (மாணவன், சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலேந்திரா, தாரணி, வர்ஷினி, கஜந்தன், அஜந்தன், கிஷானி, பிரியலக்ஷன், சுவஸ்திகா, டினோசன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (ஏழாலை தெற்கு, ஏழாலை) நடைபெற்று, பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 28165) S-1

# முன்னாள் அரசியல் கைதிக்கு அழைப்பாணை

வவுனியா, மார்ச் 12

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவருமான செ.அரவிந்தன் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது. இன்று காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

விசாரணைப் பிரிவு ஒன்றால் மேற்கொள் எப்பட்டு வரும் முகநூல் கணக்கு சம்பந்தமாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-18)

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 05 . 1950



இறப்பு 09 . 03 . 2024

**நவராணி குகனேஸ்வரன் (பேபி)**

9ம் கட்டை புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவராணி குகனேஸ்வரன் (பேபி) கடந்த 09.03.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், குகனேஸ்வரனின் அன்பு மனைவியும், பிரணவன், பிரதீபன், பிரதீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோகுலகாந், மயூரி ஆகியோரின் மாமியாரும், சின்மயன், தன்மயி, கிரன்மயி, அனிஷ் ஆகியோரின் பேர்த்தியும், நவரத்தினராசாத்தி, நவரத்தினவேல், நவரத்தினமணி, நவரத்தினராஜவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேஸ்வரி, ஜீவேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2024) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கிந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**9ம் கட்டை,**
**புத்தூர்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 378 6559**

(CS54341) J-1

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் உள்ள
Hotel ஒன்றுக்கு House keeper
தேவை.
(ஆண்/பெண்)
**077 240 2093**

# கனேடியர்கள் படித்தவர்கள்

ஒட்டாவா, மார்ச் 12

உலகின் அதிகமான கல்வியறிவுள்ளோரைக் கொண்ட நாடாக கனடா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதிகமான கல்வியறிவுள்ளோரைக் கொண்ட ஆசிய நாடாக ஜப்பான் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

வெளியாகியுள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கனடாவில் 59.96 வீதமான மக்கள் கல்வியறிவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். கனடாவுக்கு அடுத்த இடத்தில் ரஷ்யா உள்ளது. அங்கு 59.96 வீதமான மக்கள் கல்வியறிவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஜப்பானில் 52.7 வீதமான மக்கள் கல்வியறிவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். (ம)

## மரண அறிவித்தல்



**திருமதி. விஜயராணி சிறீதரன்**

கொழும்பு மரதானையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியையும் வெள்ளவத்தையையும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. விஜயராணி சிறீதரன்
அவர்கள் சனிக்கிழமை 9 ம் திகதி அன்று சிவபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற துரையப்பா, லட்சுமியம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற சோமசுந்தரம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும், பிரதான வைத்திய ஆய்வுகூட நுண்கலைஞர் சோமசுந்தரம் சிறீதரன், (Kandy - Hospital) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேஷலிங்கம், செந்திவேல், விசாகபதி அவர்களின் அன்பு சகோதரியும், சுதேஷ் (பிரித்தானியா), சுபித்தா (அவுஸ்திரேலியா), Dr.சுகன்யா (பிரித்தானியா) அவர்களின் அன்புத்தாயாரும், வட்சலா (பிரித்தானியா), குலேந்திரன் (அவுஸ்திரேலியா), குகன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சியாமளி, ரஜீவன், சிவானி, ஷாமினி, சேயோன், அனிஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வியாழக்கிழமை 14.03.2024 காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை கிரியைகள் நடைபெற்று 2.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

தொடர்புகளுக்கு:
சிறீதரன்- கணவர் : +94772748302
சுதேஷ் - மகன்: +94761436837 / +447941324334
சுபித்தா- மகள்: +94778504248 / +61407453591
Dr.சுகன்யா- மகள்: +447575060266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபந்து அரசாங்கம் ஆலோசிக்கும் ரணில்

**கொழும்பு, மார்ச் 12**

**நாடாளுமன்றத்தைக் கலைத்து, காபந்து அரசாங்கத்தை அமைத்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமான சட்டத்தரணிகளிடம் ஆலோசனை பெற்றுவருகின்றார் என்று அறியமுடிகிறது.**

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தவேண்டுமென மஹிந்த ராஜபக்ச தரப்பு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் ரணில் இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தவேண்டுமென ராஜபக்ச தரப்பு அழுத்தம் கொடுத்திருந்தபோதும் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க விரும்புகிறார். அதனாலேயே ராஜபக்சவுடனான உறவைத் தொடர முடியாத இக் கட்டான சூழல் ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் பின்னணியிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து, காபந்து அரசாங்கம் ஒன்றை அமைத்த பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் திட்டமிட்டு வருகிறார் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பான சட்டச்சிக்கல்கள் குறித்துத் தனக்கு நெருக்கமான சட்டத்தரணிகளுடன் ரணில் கலந்துரையாடியிருக்கிறார். சட்டச்சிக்கல்கள் தொடர்பாக மேலும் ஆலோசனைகளைப் பெற்ற பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

## ராஜபக்ச தரப்பால் சாதிக்கமுடியாது!

*முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 12

மொட்டுக்கட்சியை மையப்படுத்திய ராஜபக்ச தரப்பால் எதையும் சாதிக்கமுடியாது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தீவிர அரசியல் செயற்பாட்டாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்ச தரப்பில் இருந்து எவர் வேட்பாளராகப் போட்டியிட்டாலும் வெற்றிபெற முடியாது. தமது தரப்பு வேட்பாளர் வெற்றி பெறுவாரென நாமல் ராஜபக்ச எதிர்பார்ப்பது வேடிக்கை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைக்கத் தீர்மானித்தாலும் நாமல் உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் நாடாளுமன்றத் தேர்தலையே விரும்புகின்றனர். ரணிலுக்கு மக்கள் மத்தியில் போதுமான ஆதரவு இல்லாத காரணத்தால் அவர், ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தீர்மானித்துள் ளார்.

ஆனாலும் மொட்டுக்கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலைக் கோருவதற்கான காரணம், குறைந்தபட்சம் 15 உறுப்பினர்களையாவது நாடாளுமன்றுக்கு கொண்டு வருவதே. ரணிலுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுத்தால் நிச்சயம் தோல்வி என்பதும் அவர்களுக்குப் புரியும் - என்றார். (எ-இ)


**வாடகைக்கு**

யாழ். சிவலிங்கப் புளியடி - ஒட்டுமடம் சந்திக்கு இடையில் தொழில் பேட்டைக்கு உகந்த இடம் வாடகைக்கு விடப்படும்.

077 273 0979 / 077 711 1299

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04
08
1933



மறைவு
03
03
2014

**அமரர் இராமலிங்கம் மயில்வாகனம்**

(ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி)

திதி: வளர்பிறை திருதியை (12.03.2024)

தர்மத்தின் தலைவனாய் குடும்பத்தின்
குல விளக்காய் தரணியிலே வந்துதித்த எங்கள் அப்பாவே
அன்று நடந்தது இன்று போல் இருக்கிறது
காலம் கடந்து போனாலும் எங்கள் கண்களில் கண்ணீர் வழிகின்றது
ஆண்டுகள் பத்து ஆனாலும் என்றும் உங்கள் நினைவுகளுடன்........

"உதயதாரகை"
கைதடி மத்தி, கைதடி.

பிள்ளைகள்

(cs.42096) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
12
01
1959



மறைவு
11
03
2024

**றூபேட்மரியதாஸ் மேரிஜெறோசா**

தாளையடியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை சாரையடியை வசிப்பிடமாகவும் கொண்ட றூபட் மரியதாஸ் மேரி ஜெறோஷா நேற்று (11.03.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெனடிற் - எலிஸ்ரேலியா ஆகியோரின் அன்புப் புதல்வியும், றூபேட் மரியதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், லெனின் எடிசன் (PPN BOSS), ஜக்ஷன் (JRM உரிமையாளர்), றூபாஜினி (JRM உரிமையாளர்) மற்றும் ஜெறுசன் (PPN Jaffna) ஆகியோரின் அன்புத் தாயும், சஜானா, சங்கீதா, ராஜேந்திரகுமார், ஜென்சி இவேன்ஞலின் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரக்ஷிகா, சிம்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஆகத்தம்மா, பிரான்சீஸ், செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் லோறன்ஸ் (கனடா), ஹென்று கட்சன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அந்தோனிப் பிள்ளை, வனஜா, திரேசம்மா, ஜெயா (கனடா), கொண்சீலி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வு இன்று (12.03.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்துக்காக தாளையடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி

தகவல்:
குடும்பத்தினர்.
077 917 3777
077 122 1959

(CS/54345) J-1

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் மருத்துவ வாயுக்கள் (Medical Gases) விநியோகத்திற்கான கேள்வி கோரல் - 2024-2025

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH/KOC/2024/ MG/01 | Medical Gases Supply | 100,000.00 | 24.06.2024 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக்கொள்ளப் படாதவராக இருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை **மாவட்ட வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து 12.03.2024 திகதியிலிருந்து 25.03.2024 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 26.03.2024 ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் **பெறுகை இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.** நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல. 021 228 5329, 021 228 4111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **90 நாட்கள் (24.06.2024)** வரையும் செல்லுபடியாகும்.
7. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 18.03.2024 ஆந் திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

(CR.42097) (n-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச நாணய நிதியத்தின்

# பகுப்பாய்வு அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்குக

ஜனாதிபதியிடம் வலியுறுத்திய சுமந்திரன்

**கொழும்பு, மார்ச் 12**

**சர்வதேச நாணய நிதியத்தால் (ஐ.எம்.எப்.) தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வுத் தரவுகளுடன்கூடிய அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத் தின் முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அழைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மாத்திரம் கலந்துகொண்டார். இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதே அரசாங்கத்தின் விருப்பம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த முன்மொழிவுகளை சர்வதேச நாணய நிதியத்துடன் மேலும் கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட ஏனைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் சாதகமான மற்றும் சரியான வேலைத்திட்டத்துக்குத் தனது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள், வர்த்தகக் கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களுடன் நடைபெற்று வரும் பேச்சுகள் குறித்து திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, விரிவான விளக்கத்தை அளித்ததுடன், இந்தப் பேச்சுச் சுற்றுகளை இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகைத் தீர்ப்புத் தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், அதற்கான விரிவான கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார் - என்றுள்ளது. (அ-ஓ-26-44)

# பாடசாலையில் குண்டு மீட்பு

வவுனியா, மார்ச் 12

மடுகந்தை தேசிய பாடசாலையில் இருந்து வெடிக்காத நிலையில் 7 மோட்டார் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையில் இருந்த குப்பைக் குழியைத் துப்புரவு செய்த போது அதற்குள் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பாடசாலை நிர்வாகத்தால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் அங்கிருந்து 7 மோட்டார் குண்டுகளை மீட்டனர். (ஓ-18)

# ஏ-9 வீதியில் இரு விபத்துகள்

சாவகச்சேரி, மார்ச் 12

சாவகச்சேரி நகரப் பகுதியில் ஏ - 9 வீதியில் நேற்று இரு விபத்துகள் இடம்பெற்றன.

சங்கத்தானை இந்துக் கல்லூரிக்கு அருகில் இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதின. கல்லூரி ஆரம்ப நேரமென்பதால் பேருந்துகள் மெதுவாக வந்ததால் பயணிகளுக்கு தெய்வாதீனமாக பாதிப்பு ஏற்படவில்லை. ஆயினும் பேருந்துகள் சேதமடைந்தன.

மற்றொரு விபத்து ஏ -9 வீதியில் சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது. குறித்த வீதியில் பயணித்த கார் திடீரெனத் திரும்பியபோது, எதிரில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது. காரினுள் மோட்டார் சைக்கிள் சிக்கிய நிலையில், அதிலிருந்து மோட்டார் சைக்கிளை வெளியில் எடுப்பதற்காக காரை பின்நோக்கிச் செலுத்தியபோது மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை கார் மீண்டும் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியர் காயமடைந்தனர். சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (அ-ஓ-9)

# மாணவனை காணோம்



நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அச்சங்குளத்தில் வசிக்கும் சந்திரசேகர் நிலோஜ் ரொக் ஷன் (வயது - 17) எனும் மாணவனை நேற்றுமுன்தினம் மதியத்திலிருந்து காணவில்லை என்று பெற்றோரால் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஓ-213)

# பொலிஸ் வாகனம் மோதி இளைஞன் காயம்

பருத்தித்துறை, மார்ச் 12

பருத்தித்துறையில் பொலிஸ் வாகனம் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கற்கோவளம், பருத்தித்துறையைச் சேர்ந்த துரைரட்ணம் துவாரகன் (வயது -24) என்ற இளைஞர் படுகாயங்களுக்குள்ளானார். இளைஞர் பொலிஸாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ-100)

# ஆழ்துளைக் கிணறில் அகப்பட்டுள்ளது சிசு!



புதுடில்லியில் பரபரப்பு

மீட்பு முயற்சிகள் தீவிரம்

இந்தியாவின் புதுடில்லியில் உள்ள கேஷ்பூர் பகுதியில், ஆழ்துளைக் கிணற்றுக்குள் குழந்தையொன்று தவறி வீழ்ந்துள்ளது. சுமார் 40 அடி ஆழத்தில் சிக்கியுள்ள அந்தக் குழந்தையை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீட்புக் குழுவின் தகவல்களின்படி, குழந்தை நேற்று முன்தினம் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளது. குழந்தைக்கான உணவுப் பொருள்கள் மற்றும் குடிதண்ணீர் என்பன கீழ் அனுப்பப்பட்டுள்ளன. குழந்தை இருக்கும் இடம் அவதானிக்கப்பட்டுள்ளது. குழந்தை சிக்கியிருக்கும் ஆழ்துளைக் கிணற்றுக்கு அருகாக மற்றொரு ஆழ்துளையை அமைத்து குழந்தையை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. (ம)


## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கு ஆலய தர்மகர்த்தா சபையினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**மேற்படி விடயம் தொடர்பாக பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 15.03.2024 [வெள்ளிக்கிழமை] ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஆலயத்தின் தெற்குப் புறத்தில் ஒன்று கூடுமாறு வேண்டப்படுகிறீர்கள்.**

➡ தகுதி பெற்ற கேள்விதாரர்கள் உடனடியாக அதற்கான குத்தகைப் பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

➡ ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவகாலத்தில் ஆலய தர்மகர்த்தா சபையினரால் வழங்கப்படும் தற்காலிக கடைகளும் தவிர வேறு கடைகள் அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

➡ உணவு கையாளும் நிலையங்கள் உரிய சுகாதார அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

➡ உற்சவ காலத்தில் ஆலய தர்மகர்த்தா சபையினரால் வரையறுக்கப்பட்ட வீதி எல்லைக்குள் தற்காலிக கடைகள் அமைப்பதற்கோ, வாகனங்களை நிறுத்தி வைக்கவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது.

➡ பொலித்தீன்கள் மற்றைய பிளாத்திக்குக் கழிவுப் பொருட்களை உரிய முறையில் அகற்றுவதற்கென ஒதுக்கப்பட்ட கழிவுத் தொட்டிகளில் இடப்பட வேண்டும்.

மருதடி விநாயகர் துணை

செயலாளர்,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய,
தர்மகர்த்தா சபை.

12.03.2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உக்ரைனுடன் பேச்சு நிராகரித்தது ரஷ்யா!

## பாப்பரசரின் முயற்சி தோல்வி

மொஸ்கோ, மார்ச் 12

**உக்ரைனுடன் அமைதிப் பேச்சுகளில் ஈடுபடுமாறு ரஷ்யாவை மன்றாட்டமாகக் கேட்கின்றேன் என்று பாப்பரசர் பிரான்ஸிஸ் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அந்தக் கோரிக்கைகளை ரஷ்யா அடியோடு நிராகரித்துள்ளது.**

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான மோதல் தொடர்பில் அண்மையில் பாப்பரசர் பிரான்ஸிஸ் தனது கருத்துகளை வெளியிட்டிருந்தார். உக்ரைனின் அண்மைக்காலப் பேரழிவுகள் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருந்த பாப்பரசர், உக்ரைனில் அமைதியைக் கொண்டுவருவதற்காக அனைத்து நாடுகளும் முயற்சிக்கவேண்டும். ரஷ்யா உலக அமைதி தொடர்பில் கரிசனை கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே, பாப்பரசருடைய கோரிக்கையைத் திட்டவட்டமாக நிராகரித்தது ரஷ்யா. 'உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கியிடம் சரணடையமாட்டோம்' என்று தெரிவித்துள்ள ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், ஒருதலைப் பட்சமான அமைதிக்கான முயற்சிகளை நிராகரிப்பதாகவும் தெரிவித்தார். (ம)


# பிரான்ஸில் புயல்: 5 பேர் மாயமாகினர்

பரிஸ், மார்ச் 12

பிரான்ஸின் தென்கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய கடும் புயல் காரணமாக ஐந்து பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் தென்கிழக்கு நகரமான கார்ட் நகரம் கடந்த சனிக்கிழமை வீசிய புயலால் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டது. புயலின் விளைவால் பெரும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டிருந்தது. இதன்போது பாலமொன்றின் ஊடாகப் பயணித்த கார் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. அந்தக் காரிலிருந்த இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட ஐந்து பேர் காணாமற்போனநிலையில் அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மீட்புக் குழுவினர் உலங்குவானூர்திகள் மூலம் காணாமற்போனவர்களைத் தேடிவருகின்றனர். கணிக்க முடியாத திீர் வெள்ளப்பெருக்கே அசம்பாவிதத்துக்குக் காரணமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# துருக்கி – மாலைதீவு புதிய இராணுவ ஒப்பந்தம்

அங்கரா, மார்ச் 12

இந்தியாவுடனான உறவை முறித்துக் கொண்டுள்ள மாலைதீவு தற்போது, துருக்கியுடன் இராணுவ ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

மாலைதீவின் தீவுப் பகுதிகளையும், கரையோரப் பகுதிகளையும் ட்ரோன் மூலம் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ட்ரோன்களை இயக்குவதற்கு ட்ரோன் தளமொன்றை அமைப்பது தொடர்பிலும் தற்போது மாலைதீவு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவுக்கும் துருக்கிக்கும் இடையே கடந்த 1948ஆம் ஆண்டிலிருந்து உறவு இருந்து வந்தாலும், பெரும்பான்மையான விடயங்களில் இந்தியாவுக்கும் துருக்கிக்கும் வேறுபட்ட கருத்து நிலைப்பாடுகளே இருந்து வருகின்றன. தற்போதும்கூட சில விடயங்களில் துருக்கி, பாகிஸ்தான் சார்பு நிலைப்பாட்டில் இருந்துவருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், இந்தியாவுடனான உறவை அறுத்துக்கொண்டுள்ள மாலைதீவு துருக்கியுடன் ஒப்பந்தத்தைச் செய்துள்ளமை பரபரப்பாகியுள்ளது. (ம)

## ஒஸ்கர் விருதுகள் அறிவிப்பு

# சிறந்த நடிகர் சிலியன் மர்பி சிறந்த இயக்குநரான நோலன்



சிறந்த நடிகருக்கான ஒஸ்கர் விருதை சிலியன் மர்பி வென்றுள்ளார். 'ஒஸ்கருக்குத் தகுதியானவர்' என கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக உலக ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வந்த சிலியனுக்கு இவ்வாண்டு அந்த விருது கிடைக்கப் பெற்றுள்ளமை ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சிறந்த இயக்குநர் விருதை இயக்குநர் கிறிஸ்டோபர் நோலன் வென்றுள்ளார்.


96ஆவது ஒஸ்கர் விருது வழங்கும் விழா, லொஸ் ஏஞ்சல்ஸில் நேற்று நடைபெற்றது. இதன்போதே சிலியன் மர்பிக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

சிறந்த திரைப்படத்துக்கான விருதை 'ஓப்பன்ஹெய்மர்' தெரிவானது. முன்னணி நடிகைக்கான விருதை எம்மா ஸ்டோன் பெற்றுள்ளார்.

ஓப்பன் ஹெய்மர் திரைப்படம் மேலும் 3 ஒஸ்கர் விருது களைத் தனதாக்கியுள்ளது.

ரொபர்ட் டவுனி ஜூனியர் சிறந்த துணை நடிகர் விருதைப் பெற்றுக் கொண்டார்.

சிறந்த படத் தொகுப்பு மற்றும் ஒளிப்பதிவுக்கான விருதையும் இந்தத் திரைப்படம் சுவீகரித்துக் கொண்டது. 'மரியப்போலில் 20 நாள்கள்' என்ற உக்ரைனிய நாட்டுக் குறும்படம் சிறந்த குறும்படத்துக்கான விருதைப் பெற்றுக்கொண்டது. (ம)



# அர்னோல்ட் முதலிடம்!

உலக செல்வந்தர்கள் பட்டியலில் அமேசனின் நிறுவுநர் ஜெப் பெஸோஸை இரண்டாம் இடத்துக்குப் பின்தள்ளி லூயிஸ் உய்ட்டன் நிறுவன தலைமை செயல் அதிகாரி அர்னோல்ட் முதலிடம் பிடித்துள்ளார். எலான் மஸ்க் மூன்றாம் இடத்திலுள்ளார். (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1941



மறைவு 09 . 03 . 2024

**அமரர் பரமநாதன் சிவபாக்கியம்**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் சிவபாக்கியம் அவர்கள் கடந்த (09.03.2024) சனிக்கிழமை அன்று இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், நாகலிங்கம் - இரத்தினம் தம்பதியினரின் ஆசை மருமகளும், அமரர் பரமநாதன் (முன்னாள் இ.போ.ச.ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜலக்ஷ்மி, சிவநாதன், நாகேஸ்வரி மற்றும் செல்வராணி, கேதீஸ்வரி, விஜயலக்ஷ்மி, சொரூபராணி, சிவகணேஷநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரவதனன் (மோகன் London) அவர்களின் அன்புத் தயாரும், சாலினி அவர்களின் அன்பு மாமியாரும், அபிகேய்ல், குளோயி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2024) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பித்து, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 891 6288

புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

(CR 42099) S-1

# காணிகளைக் கையளிக்க நடவடிக்கை

கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினர் வசமிருந்து விடுவிக்கப் பட்ட 40.9 ஏக்கர் காணிகளையும் உரியவர்களிடம் கையளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் தெரிவித்துள்ளார். அத்துடன் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச காணியை அவர் நேரில் சென்றும் பார்வையிட்டுள்ளார். (அ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தை புறக்கணியுங்கள்

## தமிழ் எம்.பி.க்களிடம் கோரிக்கை

சைவசமயமும், வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலும் அவமதிக்கப்பட்டதைக் கண்டித்தும், வழிபாட்டு உரிமையை வலியுறுத்தியும், பொலிஸாரின் அட்டூழியங்களுக்கு நீதி கோரியும் நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்குமாறு சைவசமயத் தலைவர்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறைகூவல் விடுத்துள்ளனர். வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவில் மகா சிவராத்திரிப் பூசையின் போது பொலிஸாரின் அட்டூழியங்களைக் கண்டித்தும், கைது செய்தோரை உடன் விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தியும் நேற்றுத் திங்கட்கிழமை மாலை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன முன்றிலில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் இவ்வாறு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-66)

### ஆதிலிங்கேஸ்வரரை...

நல்லூர்க் கோயில் பின்வீதியில் நேற்று மாலை 4 மணியளவில், ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 'குருந்தூர்மலை எங்கள் சொத்து!', 'ஆதி லிங்கேஸ்வரர் தமிழர் சொத்து!', 'சட்டவிரோதக் கைதுகளைத் தடுத்து நிறுத்து!', 'வெடுக்குநாறிமலை ஆதிசிவன் எமது அடையாளம்!', 'தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்காதே!', 'வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்!', 'இந்த மண் எங்களின் சொந்த மண்!' 'ஆதிலிங்கேஸ்வரரை அபகரிக்காதே' ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவகுரு ஆதீன குரு முதல்வர் வேலன் சுவாமிகள், சர்வமதப் பேரவையினர், தென்கையிலை ஆதீன குரு முதல்வர் அகத்தியர் அடிகளார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராசா கஜேந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஷ்பிரேமச்சந்திரன், ந.சிறீகாந்தா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபை முன்னாள் உறுப்பினர்கள், அகில இலங்கை சைவ மகாசபையினர், தமிழ் சைவப் பேரவையினர், ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ-20-26-66-125)

### காரில்...

வட்டுக்கோட்டையில் நேற்றிரவு வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞன் உயிரிழந்துள்ளான்.

வட்டுக்கோட்டை தென்மேற்கைச் சேர்ந்த தவச்செல்வம் பவிதரன் (வயது - 24) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். காரைநகருக்கு மனைவியுடன் சென்றுவிட்டு வட்டுக்கோட்டை திரும்பும் போது பொன்னாலைச் சந்தி கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து இளைஞனை வாள்வெட்டுக் கும்பல் வழிமறித்துள்ளது. இளைஞனும் அவரது மனைவியும் உயிரைப் பாதுகாக்க கடற்படை முகாமுக்குள் தப்பி ஓடியுள்ளனர். கடற்படையினர் அவர்களை முகாமை விட்டு வெளியேற்றியுள்ளனர்.

இதனையடுத்து காரில் வந்த 15 பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் இளைஞனைத் தனியாகவும் பெண்ணைத் தனியாகவும் கடத்திக் கொண்டு வட்டுக்கோட்டைப் பக்கமாகச் சென்றுள்ளனர். இளைஞனை வெட்டுக் காயங்களுடன் வட்டுக்கோட்டை ஆதார மருத்துவமனையில் போட்டுவிட்டு வாள்வெட்டுக் கும்பல் காரில் தப்பிச் சென்றுள்ளது. அதே வேளை கடத்திச் சென்ற பெண்ணை சித்தங்கேணிச் சந்தியில் இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர்.

வட்டுக்கோட்டை மருத்துவமனையிலிருந்து இளைஞன் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துள்ளான்.

முன்னர் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலுக்குப் பழிவாங்கும் வகையிலேயே இந்த வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் வட்டுக்கோட்டை பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களை இனம்கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். (ஒ-20-27-125-26)

### நாடாளுமன்றம்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜூலை 15 ஆம் திகதி தீர்க்கமான நாளாகும். ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு விடுக்கும் காலப்பகுதியாகும். அந்தக்காலப்பகுதியில் அதற்கான அறிவிப்பை ஆணைக்குழுவினர் விடுத்தாக வேண்டும். எனினும், தற்போது நாடாளுமன்றத் தேர்தல் பற்றியும் பேசப்படுகின்றது. ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமெனில் மே 13 ஆம் திகதி ஆரம்பமாகும் வாரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும். இவ்வாறு மே நடுப்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்படாவிட்டால் ஜூலை மாத நடுப்பகுதிக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும்.

அதேவேளை, எந்தவொரு காரணத்துக்காகவும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைக்கமுடியாது. நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடு இடம்பெறுகின்றது எனக்கூறியும் அதனைச் செய்யமுடியாது. ஜூலை நடுப்பகுதியில் கட்டாயம் அறிவிப்பை விடுத்தாக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை எனவும் கூறமுடியாது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது கையாண்ட இந்த விளையாட்டு ஜனாதிபதி தேர்தலின்போது எடுபடாது. ஏனெனில் பாதீட்டில் 10 பில்லியன் ரூபா ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால்கூட ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அதற்காகப் பயன்படுத்தமுடியாது. அவ்வாறு பயன்படுத்திவிட்டு, ஜனாதி பதித் தேர்தலை நடத்த நிதி இல்லை எனக் கூற முடியாது - என்றார். (அ-ஒ-44)

### இறப்புக்குக்...

ஆனால், அந்த அறிக்கையில் முழுமையாக எல்லா விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பதை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம்.

அதாவது எடுக்கப்பட்ட மனித எச்சங்களிலிருந்து அதற்கான வயது, அதன் பால் நிலை, இறப்புக்கான காரணம் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. அதேநேரம் தடயவியல் நிபுணத்துவப் பொலிஸாரினதும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஒட்டுமொத்தமாக எல்லோருடைய அறிக்கைகளும் கிடைக்கப்பெற்ற பின்னர்தான் வழக்குத் தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் என நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம்.

நீதிமன்றமானது சட்ட மருத்துவ அதிகாரி ராஜபக்சவை நீதிமன்றத்தில் முன்னிலையாகும் அறிவுறுத்தலை அனுப்பி வைத்துள்ளதுடன் வழக்கை மே 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது - என்றார். (அ-ஒ-56-213)

### யானை...

முன்தினம் உயிரிழந்துள்ளார். இருப்பினும் அவரது சடலம் நேற்றுக் காலையே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அம்பகாமத்தைச் சேர்ந்த முத்துத்தம்பி கிருஸ்ணசாமி (வயது - 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மஹ்ரூஸ் சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார். கரிப்பட்டமுறிப்பு, அம்பகாமம் - ஒலுமடு உள்ளிட்ட பகுதிகளில் பகல் வேளைகளில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள். வீதிகளில் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (ஒ-13-19)

### 2,500 ஏக்கர்...

கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் காணிகளை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதிக்கும் மாவட்டச் செயலருக்கான மனுவையும் நேற்றுக் கையளித்தனர். இதன்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தெந்த முகாம்கள் அகற்றப்படும் என்ற விவரம் கிடைத்துள்ளது. அதற்குள் இது உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் விடுவிக்கப்படுமோ தெரியவில்லை" என்று மாவட்டச் செயலர் மக்களிடம் தெரிவித்துள்ளார். (அ-ஒ-19)

### விமானப்படையில்...

முன்னிட்டு கண்காட்சி இடம்பெற்றது. இதன்போது சிறிலங்கா விமானப்படையில் இணைவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக 100க்கும் மேற்பட்ட இளையோர் அதிகாரிகள் தரத்துக்கும், 156 பேர் ஏனைய பதவி நிலைகளுக்கும் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் பலர் மேற்குறித்த பதவிநிலைகளுக்கான தகுதிகளையும் கொண்டிருக்கின்றனர் எனவும் சாகல குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-6)


### பொலிஸ்மா...

வடக்கு மாகாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அன்றையதினம் வவுனியாவுக்கு வரும் அவர் மறுநாள் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார். இதன்போது சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கவுள்ளார். (அ-ஒ-26)

### கைவிலங்கைக்...

துக்குக் கொண்டு சென்றனர். இதனையடுத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்றிருந்தனர்.

இதன்போது 8 பேரினதும் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-ஒ-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைக் கைப்பற்றுவது முன்னேற்றத்தின் ஆரம்பம்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி அரசியல் அதிகாரத் தைக்கைப்பற்றுவது என்பது இறுதியானது அல்ல, நாட்டைக் கட்டியெழுப்பும் ஆரம்பம் என்று அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது:-

மக்களின் சகல உரிமைகளும் தற்போது இல்லாமல் போயுள்ளது. நாட்டு மக்களுக்குச் சிறந்த நிலைமையை ஏற்படுத் திக்கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்.

முதலில் நாங்கள் எமது நாட்டு மக்களின் உணவு உரிமையை உறுதிப்படுத்துவோம். உண்பதற்கு உணவின்றி கட்டியெழுப்பப்படும் நாடு பயனற்றது. பொருளாதாரம்படிப்படியாகமுன்னேற்றமடைந்து வருவதாகஜனாதிபதிதிரணில் கூறுகின்றார். ஆனால் மக்களுக்கு உண்ண உணவில்லை. எமது நாட்டுக்குத் தேவைப்படும் அளவுக்கு மேல் நாம் அரிசியை உற்பத்தி செய்கின்றோம். மேலதிக கையிருப்பும் இருக்கின்றது. எனினும் விவசாயி தனது நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை. நுகர்வோருக்கும் நியாயமான விலையில் அரிசியைக் கொள்வனவு செய்யமுடியவில்லை. எமது நாட்டின் நெல் சந்தையில் ஒரு ஏகபோகம் உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களே எப்போதும் விலையைத் தீர்மானிக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் அரிசி சந்தையின் ஏகபோகத்தைக் கட்டாயம் உடைத்தெறிவோம்-என்றார். (எ-இ)

**கார், வான் குத்தகைக்கு தேவை**

தனியார் நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் சாரதி இல்லாமல் மாதாந்த நீண்டகாலக் குத்தகைக்குத் தேவை.

**076 437 5404**

**வேலைக்கு ஆள் தேவை**

கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள Beauty Saloon ஒன்றிற்கு Pedicure , Manicure செய்வதற்கு பெண்கள் தேவை. அனுபவம் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். மேற்படி சலூன் CCTV கண்காணிப்புடையது.

(CR 42098) J-1

**071 322 3456**

# ரணிலுக்கு ஆதரவு வழங்க இ.தொ.கா. நிபந்தனையாம்

கொழும்பு, மார்ச் 12

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

அவற்றை நிறைவேற்றியபின்னர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்கு ஆதரவு வழங்கப்படும் என்று இ.தொ.கா.வின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று தெரிவித்தார்.

முதல் விடயம் மலையகத்தில் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்பதாகும். 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய சூழ்நிலையை ஜனாதிபதி ஏற்படுத் திக்கொடுத்துள்ளார்.

இரண்டாவது, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம். தற்போது சம்பள நிர்ணயசபை ஊடாக சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்துவருகின்றார். இது தற்காலிக தீர்வு மாத்திரமே. எனவே, நிரந்தர தீர்வு என்னவென்பதை ஜனாதிபதி முன்வைக்க வேண்டும்.

இறுதியாக, காணி உரிமை விடயம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜனாதிபதி 4 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். காணி உரித்தும் வழங்கப்படவேண்டும். இவற்றைச் செய்தால் மட்டுமே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஆதரிப்போம்-என்றார். (எ-44)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி


- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 12 . 1950



மறைவு 11 . 03 . 2024

**முத்தையா இராஜேந்திரம்**

வேலக்கை நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மேற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராஜேந்திரம் அவர்கள் நேற்று (11.03.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணேசன் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரி (பபி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுபத்திரா, பத்மநாதன் மற்றும் பத்மினிதேவி, பிரேம்குமார், ஜெயசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி (பேபி) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2024) நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி (பபி)

076 881 0024

(CS 28169) S-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் : 17.05.1933 இறைவன் அடியில் : 23.02.2023

**கந்தையா சச்சிதானந்தம்**

(திதி: மாசி மாத பூர்வபட்ச திருதியை)

எம்மை சீராட்டிப் பாராட்டி வளர்த்த இனிய தந்தையே
பன்னிரண்டு திங்கள் பறந்தோடிச் சென்ற போதும்
எம் இரண்டு கண்களிலும் நீர் வற்றவில்லை - இன்னுயிர்
பல்லாண்டுகள் பல வந்தபோதும் - உங்கள்
பிரிவுத்துயர் மாறாது எம் துயர் தீராது - மீண்டும்
பிறப்பு உண்டெனில் எம் தந்தையாக வரவேண்டும்.

அம்பனை, பன்னாலை,
தெல்லிப்பளை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.54342) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 ... advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org